# சபையைத் தாக்குகிற கடைசி வாதை



சகோ. பிரன்ஹாம் பேசிய செய்தியிலிருந்து

## *செய்தி:* தேவனால் அருளப்பட்ட பாதை, டிசம்பர் 1, 1953

112. சரி. நீங்கள் இதைக் கவனிக்க விரும்புகிறேன். அதன்பிறகு அவன், "நீங்கள் இந்த ஆட்டுக்குட்டியை எடுத்து, சாயங்கால நேரத்தில் அதைக் கொல்ல விரும்புகிறேன்" என்றான், கிறிஸ்துவுக்கு பரிபூரண முன்னடையாளம், அவர் சாயங்காலத்தில் கொல்லப்பட்டார். அப்போது இஸ்ரவேலின் முழு சபையாரும் மரணத்திற்கு சாட்சிகளாக இருந்தார்கள். அவர்கள் கிறிஸ்துவில் செய்தார்கள். இரத்தமானது கதவின் மேல் பூசப்பட வேண்டியிருந்தது, அந்த இரவில், மரண தூதன் தேசத்தில் சவாரி செய்து வந்து, இரத்தம் இல்லாத எல்லாவிடங்களிலும் மரணம் இருக்கப் போவதாக இருந்தது.

113. சகோதரனே, நான் இதை உங்களுக்குச் சொல்லுகிறேன், தேசத்தில் மரண தூதன் எப்பொழுதாவது சவாரி செய்து கொண்டிருக்கிற ஒரு நேரம் இருந்திருக்குமென்றால், அது இன்றிரவு தான். ஆசாரியன் நின்று கொண்டிருக்கிற சபை வாசலுக்கு அவன் வருகிறான். இரத்தத்தையும் இயேசுவின் வல்லமையையும் மறுதலித்துக்

கொண்டும், தொடர்ந்து போய்க் கொண்டிருக்கும் ஒரு சபை, “தேவனுடைய மகிமை விலகிப் போய்விட்டது,” மரண தூதன் உள்ளே செல்கிறான், அதோடு அது முடிந்து விடுகிறது. அப்பொழுது அவர்கள் சடங்காசாரமாகவும் (formal), மரித்தவர்களாகவும், தேவனுடைய வல்லமையை மறுதலிக்கிறவர்களாகவும் ஆகி விடுகிறார்கள். முதலாவது காரியம் என்னவென்று தெரியுமா, அந்த முழு கூட்டத்தினர் மேலும் மரணம் மூடிக்கொள்கிறது. நீங்கள் ஒருபோதும் அவர்களை விசுவாசிக்கும்படி செய்யவே மாட்டீர்கள். அவர்களால் அதை விசுவாசிக்க முடியாது.

114. இப்பொழுது, இந்த மரண தூதனைக் கவனியுங்கள். என்னால் அந்த தகப்பனைக் காண முடிகிறது. இப்பொழுது, இப்பொழுது, அவர்கள் திடமாக விசுவாசித்து எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள், சூரியன் அஸ்தமித்து, இருள் வரத் தொடங்கின போது, அவர் ஒருமுறை அந்த ஆட்டுக்குட்டியின் இரத்தத்தின் கீழாக வந்து, அணிவகுத்துச் செல்வதற்கான உத்தரவு கொடுக்கப்படுவது வரையில், அவர்கள் அங்கே கீழேயே தங்கியிருக்க வேண்டியிருந்தது. சகோதரனே, இப்பொழுது, நசரீன்களாகிய உங்களுக்கு இது நன்மையானதாக இருக்கும்.

115. கவனியுங்கள், இரத்தத்தின் கீழாக வருதல்... ஒருமுறை இரத்தத்தின் கீழாக வந்து, அதை கதவின் மேற்சட்டத்திலும், நிலைக்காலின் மேலும் தெளித்தல். ஆனால் ஒரு மனிதன் அந்த வாசல் வழியாக இந்த வீட்டிற்குள் வரும் ஒவ்வொரு தடவையும், எகிப்தை விட்டு வெளியே அணிவகுத்துப் போகும்படியான உத்தரவுகள் வரும் வரை, அவன் அங்கேயே தங்கியிருந்தான். எனக்கு அது பிடிக்கும். அங்கே தங்கியிருத்தல்.

116. அந்த இரவில் விருந்து கொண்டாட்டங்களுக்குப் (parties) போய்க் கொண்டிருந்த அந்த வாலிப பெண்கள் இஸ்ரவேலின் சிறு வாலிப பெண்களிடம், "ரெபேக்காளே, வேகமாக வா" என்றும், மற்றும் அதைப்போன்ற காரியங்களையும் கூறிக் கொண்டிருப்பதை என்னால் காண முடிகிறது, "ரெபேக்காளே, வேகமாக வெளியே வா, நாங்கள் ... போய்க் கொண்டிருக்கிறோம்."

117. "என்னால் வர முடியாது."

118. "ஏன்?"

119. "நல்லது, நாங்கள் இரத்தத்தின் கீழிருக்கிறோம்." ஓ, என்னே. "நாங்கள் இரத்தத்தின் கீழே இருக்கிறோம்."

120. "ஓ, விரைவாக வா, நாம் போவோம். முட்டாள்தனம், அங்கிருக்கும் உன் அப்பாவிடம் உள்ள அந்தப் பழங்கால பைத்தியக்கார மார்க்கம்."

121. "ஆனால் கவனி, நான் கட்டாயம் அந்த இரத்தத்திற்கு அப்பால் போகக் கூடாது என்று என் இருதயத்திலுள்ள ஏதோவொன்று என்னிடம் கூறுகிறது."

122. அவர்கள் தொடர்ந்து தங்கள் பெரிய விருந்து கொண்டாட்டங்களுக்கும் (parties) மற்றவைகளுக்கும் போய்விட்டார்கள். அதன்பிறகு அங்கே அதனூடாக, ஏறக்குறைய நள்ளிரவில், ஒரு வினோதமான உணர்ச்சி வரத் தொடங்கியது, அது இப்பொழுது மறுபடியுமாக உலகத்தின் மேல் வந்து கொண்டிருப்பது போன்று இருந்தது, நாம் அதைக் குறித்து சற்று முன்பு பேசினோம். ஏதோ தவறாக உள்ளது: மகா துயரார்ந்த மந்தமான இருள் பூமியின்மேல் வந்திறங்கியது; காற்று வீசத் தொடங்கினது. நாம் போகப்போகிற இடமாகிய இங்கேயிருக்கும் இந்த வீட்டிற்குள் இருக்கிற இந்தச் சிறு பையனை என்னால் காண முடிகிறது. அவனைப் பாருங்கள், அவன், "அது என்னவென்று சொல்லுங்கள்? நான்-நான்-நான் ஒருவிதத்தில் வினோதமாக உணருகிறேனே.

நடனம் ஆடிக் கொண்டிருந்த வாலிப பெண்கள் எல்லாம், வீட்டிற்கு வேகமாக போய்க் கொண்டிருப்பதைப் பார்க்கிறேன்" என்று கூறுகிறான்.

123. ஓ, என்னே. அப்போது ஜெபம் பண்ண மிகவும் கால தாமதம் ஆகிவிட்டது. இப்பொழுது, முதலாவது காரியம் என்னவென்று தெரியுமா, அவன்-அவன் சுற்றும் முற்றும் பார்க்கத் தொடங்கினான் - தொடங்குகிறான். அந்தச் சிறு பையன், "அப்பா, வீட்டிலுள்ள மூத்த மகன் கொல்லப்படப் போகிறான் என்று வார்த்தை சொல்லுகிறது?" என்று கேட்பதை என்னால் கேட்க முடிகிறது.

124. "ஆமாம்."

125. "நல்லது, அப்பா, நம்முடைய வீட்டைக் குறித்து என்ன?"

126. "மகனே, நாம் எவ்வளவு பாதுகாப்பாக இருக்க முடியுமோ அவ்வளவு பாதுகாப்பாக இருக்கிறோம்."

127. "நீங்கள் பாதுகாப்பாக இருக்கிறீர்கள் என்று உங்களுக்கு எப்படித் தெரியும்?"

128. “நாம் தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்திருக்கிறோம். நாம் பெற்றிருக்கிறோம்... நாம் இரத்தத்தின் கீழே இருக்கிறோம்.”

129. அவன் கூறுவதை என்னால் கேட்க முடிகிறது, சற்று கழிந்து... கொஞ்சம் கழித்து, நான் ஜன்னலுக்கு வெளியே பார்க்கிறேன், அந்தச் சிறு பையன் ஜன்னலுக்கு வெளியே பார்க்கிறான், அவன் கவனித்தபோது, அதோ இரண்டு பெரிய கறுத்த செட்டைகள் ஆகாயத்தினூடாக வந்து கொண்டிருக்கிறது. அதுதான் மரணம். அங்கே எந்த நேரத்திலாவது கறுத்த செட்டைகள் தேசத்தைத் தாக்குவது உண்டானால், அது இன்றுதான்: நாம் பூமி அதிர்ச்சிகளை உடையவர்களாயிருக்கிறோம்; நாம் சாவைக் கொண்டுவருகிற கொள்ளைநோய்களைக் கொண்டிருக்கிறோம்; இந்த தேசத்தில் வரக்கூடிய எல்லாவிதமான காரியங்களையும் நாம் கொண்டிருக்கிறோம்; அவர்கள் எகிப்தில் செய்தது போன்றே தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. ஆனால் அழிவுக்கு முன்பாக எகிப்தைத் தாக்கிய கடைசி வாதை மரணமாக இருந்தது. சபையைத் தாக்குகிற கடைசி வாதை ஆவிக்குரிய மரணமாக இருக்கிறது. அதுதான் கடைசி காரியமாக இருக்கிறது.

130. அவர்கள் மரித்துக்கொண்டிருக்கிறார்கள், சபைகள் முற்றிலுமாக மரித்துக்கொண்டிருக்கின்றன. ஆகிக்கொண்டிருக்கிறோம், நாம், ஓ, நாம் நீடித்தக் கூட்டங்களை கொண்டிருக்கத்தான் செய்கிறோம், ஆனால் எந்த எழுப்புதலும், எழுப்புதல் இல்லை.

131. அவர்கள், "அமெரிக்காவில் பெரிய எழுப்புதல்..." என்று கூறுகிறார்கள்.

132. அது எங்கேயிருக்கிறது என்று எனக்குச் சொல்லுங்கள் பார்க்கலாம். எழுப்புதல் எங்கே? அமெரிக்காவில் ஒரு எழுப்புதலின் முதலாவது கட்டம் கூட தாக்கவில்லை. அதற்கு காரணம் என்னவென்றால், பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தின் மூலமாக அவர்களைத் திரும்ப தேவனால் அருளப்பட்ட பாதைக்குக் கொண்டு வந்து, கல்வாரி பாதையின் மூலமாக அவர்களைத் திரும்பவும் தேவனிடத்திற்கு அனுப்புவதற்குப் பதிலாக, நாம் மனிதனுடைய வேதசாஸ்திரத்தையும் மற்றும் காரியங்களையும் போதிக்க முயற்சிக்கிறோம். நாம் அவர்களை சபைக்குள் கொண்டுவந்து, அவர்களைச் சபைக்குள் சேர்த்து, அவர்களை சபைக்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணி, சபைக்குள்ளே அவர்களுடைய கரங்களைக் குலுக்கி, சபைக்குள்ளே அவர்களுடைய கடிதங்களைக் கட்ட

முயற்சிக்கிறோம்; ஆனால் அவர்கள் ஜீவனுள்ள தேவனுடைய சபையில் பிறந்தாக வெண்டும். அந்த காரணத்தினால் தான் நமக்கு எந்த எழுப்புதலும் இல்லாதிருக்கிறது.

133. நமக்கு என்ன அவசியமாயிருக்கிறது என்றால், மறுபடியும் பழைமை நாகரீகமான கலக்குதல் தான், அங்கே, பழங்கால ஜான் வெஸ்லி எழுப்புதல், அங்கே அவர்கள் நின்றுகொண்டு, இரவு முழுவதும் பிரசங்கம் பண்ணினார்கள், அப்போது பரிசுத்த ஆவியின் வல்லமை கேட்டுக்கொண்டிருந்த கூட்டத்தினரின் மேல் விழுந்து கொண்டிருந்தது. அதுதான் நமக்கு மீண்டும் அவசியமாயிருக்கிறது. ஆமென். நான் ஒருவிதத்தில் இப்பொழுது பக்திபரவசப்படுகிறேன். எனவே கவனியுங்கள், நண்பனே, நான் உங்களிடம் ஒரு காரியத்தைக் கூறட்டும். இந்த தேசத்திற்கு பெரிய தேவையாக இருப்பதைக் குறித்து நான் எண்ணிப்பார்க்கும் போது, நமக்கு இன்னும கூடுதலாக வேதாகமக் கல்லூரிகள் அவசியமில்லை. நமக்கு இன்னும் அதிகமான பிரசங்கிமார்கள் தேவையில்லை. நமக்கு என்ன தேவையாயிருக்கிறது என்றால், நமக்கிருக்கிற பிரங்கிமார்கள் பரிசுத்த ஆவியால் நிறையப்படுவது தான். அதுதான் நமக்கு அவசியமாயிருக்கிறது.

உண்மை, நான் இங்கே நின்று கொண்டிருக்கையில், அதுவே சத்தியமாக இருக்கிறது.

134. இப்பொழுது, நீங்கள் வேறு ஒரு காரியத்தைக் கவனிக்க வேண்டுமென்று விரும்புகிறேன். பிறகு, அந்தச் சிறு பையன், இந்தச் செட்டைகள் கீழே இறங்கி வருவதை கவனிக்கிறான், அது ஒரு வீட்டுக்குப் போன போது, அலறல் கூக்குரல் சத்தம் எழும்புவதைக் கேட்கிறான். ஆனால் அந்தச் சிறு பையன், "அப்பா, அந்த இரத்தம் அங்கேயிருக்கிறது என்பதில் உமக்கு நிச்சயம் உள்ளதா?" என்று கூறுவதை என்னால் கேட்க முடிகிறதா?

135. அவன் வெளியே நடந்துவந்து, வாசல் மேல் நோக்கிப் பார்த்து, "ஆம், ஐயா, மகனே, அவள் மூடப்பட்டிருக்கிறாள்" என்று கூறுவதை என்னால் காண முடிகிறது.

★★★★★

***(குறிப்பு: இந்தச் செய்தியின் இறுதி திருத்தம் இன்னும் முடியவில்லை. இது புத்தகமாக அச்சிடும் போது, இறுதி திருத்தம் செய்து வெளிவரும்.)***









